දුරකථන ) 2698475
தொலைபேசி ) 2698490
Telephone ) 2698507

ෆැක්ස් ) 2692913
பெக்ஸ் ) 2694860
Fax )

විද්‍යුත් තැපෑල )
மின்னஞ்சல் முகவரி ) postmaster@health.gov.lk
E-mail )

වෙබ්අඩවිය )
இணையத்தளம் ) www.health.gov.lk
Website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல )FHB/SHU/LET/2021
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. )

දිනය )
திகதி )2021.01. 21
Date )

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
**Ministry of Health**

---

## தனியார் வகுப்புகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஆயத்தத்திற்கான வழிகாட்டல்

இந்த வழிகாட்டி, 2020 மே மாதத்தில் வெளியிடப்பட்ட "தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின் போதும் / பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள்" உடைய பிரத்தியேக வகுப்புக்கள் / தனியார் கல்வி நிலையங்கள் என்ற பிரிவை (பிரிவு 6)" மாற்றுகிறது.

மேல்மாகாணத்திற்கு வெளியே தை மாதம் 25ம் திகதிக்கு பின்னர் தனியார் வகுப்புக்களை ஆரம்பிக்க முடியும். கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையானது (G.C.E. O/L) பங்குனி 2021 இல் முடிவடைந்த பின்னர் / மேல் மாகாணத்தில் பாடசாலை ஆரம்பித்து இரண்டு வாரங்களின் பின்னர ஆகிய இரண்டில் எது முதலாவதாக வருகின்றதோ அந்த திகதியில் தனியார் வகுப்புக்களை ஆரம்பிக்க முடியும்.

**பொது நடவடிக்கைகள்**

1. தனியார் கல்வி வகுப்புகள் படிப்படியாக திறக்கப்பட வேண்டும். முதலில், க.பொ.த சா/தரம் மற்றும் க.பொ.த உ/தரம் ஆகியவற்றுக்கான வகுப்புகளைத் தொடங்கப்படலாம்.
2. வகுப்புகளில் கலந்துகொள்வதற்காக மாணவர்கள் அல்லது ஆசிரியர்கள் மாவட்ட எல்லைகளை கடக்கக்கூடாது.
3. தனிமைப்படுத்தப்பட்ட அல்லது முடக்கப்பட்ட பகுதிகளில் வகுப்புகளைத் திறக்க முடியாது.

**ஒழுங்கமைப்பாளர் / ஆசிரியர்களுக்கு**

1. ஆசிரியருக்கு COVID-19 தொடர்பான அறிகுறிகள் இருந்தால் (இருமல், காய்ச்சல், மூக்கு ஒழுகுதல் (runny nose) மற்றும் சுவாசிப்பதில் சிரமம்) அவர்கள் கல்வி வகுப்புகளை நடத்துவதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.
2. முடக்கப்பட்ட பகுதிகள் / தனிமைப்படுத்தப்பட்ட இடங்களிலிருந்து மாணவர்கள் வகுப்புகளில் கலந்து கொள்ளாமல் இருப்பதை ஆசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும்.
3. பின்வரும் அவசர பதில் திட்டங்களை கொண்டிருத்தல்: -
   - பகுதி சுகாதார வைத்திய அதிகாரி / பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் தொலைபேசி போன்ற அனைத்து அவசர தொடர்பு விபரங்கள் சேகரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.
   - நுழைவாயிலில் கை கழுவுதல் வசதிகளை நிறுவுதல்
   - COVID போன்ற நோயறிகுறிகளையுடைய எந்தவொரு மாணவர் / ஊழியரை அவர்களுக்கான உரிய பராமரிப்பு கிடைக்கும் வரை தனிமைப்படுத்த ஒரு பகுதி / அறை அடையாளம் காணப்படல் வேண்டும்.
   - போதுமானளவு முகவுறைகள், சுத்தம் செய்யும் மற்றும் கிருமிநீக்கும் திரவங்கள் கையிருப்பில் இருக்க வேண்டும்.

4. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வகுப்பிலுள்ள அதிகபட்ச மாணவர்களின் எண்ணிக்கை 100 ஆக வரையறை செய்யப்படல் வேண்டும். இது பெரிய வகுப்புக்களுக்கும் பொருந்தும். மேலும் ஆசனங்களுக்கிடையில் ஒரு மீற்றர் இடைவெளி பேணப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 100 இலும் அதிகமாயின் வேறு கற்பித்தல் முறைகள் பயன்படுத்த வேண்டும்: நிகழ்நிலை (online) வகுப்பு முறை அல்லது அதே வகுப்பை 100 மாணவர்களைக் கொண்ட வகுப்புக்களாக மீண்டும் நடாத்துதல்
5. ஒரே வளாகத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வகுப்புகள் நடாத்தப்பட்டால்: மாணவர் கூட்டமாக சேர்வதை தவிர்ப்பதற்காக தொடக்க நேரம், நிறைவடையும் நேரம், இடைவேளை என்பனவற்றை வேறுபடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
6. அனைத்து மாணவர்களின் முகவரிகள் மற்றும் தொடர்பு எண்களுடன் ஒரு தரவுத்தளத்தை பேணுவதுடன் அதனைப் பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்க வேண்டும்.
7. மாணவர்கள் / பெற்றோருடன் விரைவாக தொடர்புகொள்வதற்கு ஒரு தகவல் தொடர்பு வலையமைப்பு (உதாரணமாக : வாட்ஸ்அப் / வைபர் குழு) பயன்படுத்தப்படல் வேண்டும்.
8. வகுப்பறைகளைத் திறக்க முன்னர்:-
   - அனைத்து மேசைகள், வாங்குகள், அடிக்கடி தொடுகைக்கு உள்ளாகும் பொருட்கள்/மேற்பரப்புகளான கதவு கைப்பிடிகள் மற்றும் மாடிப்படிக் கைபிடிச் சட்டங்கள் போன்றவற்றை சவர்க்காரமும் நீரும் கொண்டு / மாசுநீக்கித் திரவம் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.
   - தரைகளைக் குளோரின் அடங்கிய பொருத்தமான கரைசல்களைப் பயன்படுத்திச் சுத்தம் செய்யுங்கள். இது ஒவ்வொரு வகுப்பினையும் ஆரம்பிப்பதற்கு முன்னர் மீண்டும் செய்யப்பட வேண்டும்.
9. கோவிட் நோய்த்தொற்றைத் தடுக்க பொதுவான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்றுங்கள்: மற்றவர்களிடமிருந்து குறைந்தபட்சம் ஒரு மீற்றர் தூரத்தை பேணுதல், முகக்கவசத்தைப் பயன்படுத்துதல், கிரமமாகக் கை கழுவுதல் மற்றும் சுவாச நற்பழக்கங்களைக் கடைப்பிடித்தல். இவை அடிக்கடி நினைவூட்டப்பட வேண்டும்.
10. மலசலகூடங்களை அடிக்கடி தொற்றுநீக்கம் செய்வதுடன் அவற்றிற்குப் போதுமான அளவு நீர்வழங்கல் மேற்கொள்ளப்பட வேண்டும்
11. காகித அடிப்படையிலான வருகை தாள்களை பரிமாற்ற வேண்டாம். "வகுப்பு அட்டை" கையாளுவதைத் தவிர்க்கவும்.
12. வகுப்பில் அச்சுப்படிகளை (Printouts) விநியோகிப்பதைத் தவிர்க்கவும், அவ்வாறு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால், இவை குறைந்தபட்ச கையாளுதலுடன் அவற்றை எடுக்க ஒரு மைய இடத்தில் வைக்கப்பட வேண்டும்.
13. ஒரு வகுப்பின் கால அளவை அதிகபட்சம் இரண்டு மணி நேரம் வரை கட்டுப்படுத்தவும். வகுப்புகள் குளிரூட்டப்பட்ட (A/C) அறைகளில் நடத்தப்பட்டால், கால அளவு அதிகபட்சம் ஒரு மணி நேரமாக இருக்க வேண்டும். இயற்கையான காற்றோட்டத்தை முடிந்தவரை பேணவும் மற்றும் மேம்படுத்தவும்.
14. மாணவர்களுக்கு உளநல உதவி மற்றும் ஆற்றுப்படுத்துதல் தொடர்பில் உதவுங்கள்: உதாரணமாக உதவி வழங்கும் எண்களான 1999 (சுகாதார மேம்பாட்டுப் பணியகம்) மற்றும் 1926 (உளநல உதவி எண்) ஆகியவற்றை அவர்களுக்கு அறிமுகப்படுத்தவும்.
15. ஒரு குழுவாக வகுப்புகளுக்குள் உணவு உட்கொள்ளல் பரிந்துரைக்கப்படவில்லை.
16. வகுப்புகளின் நேர அட்டவணை உணவு நேரங்களைத் தவிர்க்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். ஒரு மாணவர் வகுப்பினுள் சாப்பிட விரும்பினால், உணவு உட்கொள்ளும் போது இரண்டு மீட்டர் தூரத்தை நபர்களுக்கிடையில் பேண வேண்டும். அருகிலுள்ள உணவகங்கள் / உணவு விற்பனை நிலையங்களில் உணவு உட்கொள்வதை குறைக்க வேண்டும்.
17. கல்வி வகுப்பு வளாகத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலைகள் திறக்கப்படக்கூடாது.
18. வளாகத்தில் வகுப்புகளை நடாத்துவதற்கு தயார் செய்தவுடன், அமைப்பாளர் / உரிமையாளர் / ஆசிரியர் பகுதி சுகாதார மருத்துவ அதிகாரியின் அனுமதியினைப் பெற்றுகொள்ள வேண்டும். வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை (இணைப்பு I) நிரப்ப வேண்டும், இது தரப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் மூலப் பிரதியினை சுகாதார வைத்திய அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.
19. அதன் பிரதியினை உள்ளூராட்சி மன்றத்திற்கு (மாநகர சபை / நகர சபை / பிரதேச சபை) அனுப்ப வேண்டும், மற்றொரு பிரதியை அமைப்பாளர் / உரிமையாளரிடம்

அல்லது வளாகத்தில் வைக்க வேண்டும். மேற்கண்ட வழிகாட்டல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுவதை உறுதிசெய்தல் வளாகத்தின் உரிமையாளர் / முகாமையாளரின் பொறுப்பு.

20. ஒரு மாணவர் / ஆசிரியர் COVID-19 ஐக் குறிக்கும் அறிகுறிகள் காணப்பட்டால் தனிமைப்படுத்தப்பட்ட அறையில் வைத்து பெற்றோர்களுக்கும் சுகாதார மருத்துவ அதிகாரிக்கும் தெரிவிக்க வேண்டும்.
21. COVID-19 க்கு ஒரு மாணவர் / ஆசிரியர் பி.சி.ஆர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தால், நோய்தொற்று இல்லை என்ற அறிக்கை வரும் வரை வகுப்புகளில் கலந்துகொள்வதைத் தவிர்க்க வேண்டும்.
22. உறுதிப்படுத்தப்பட்ட COVID-19 நோயாளி கண்டறியப்பட்டால், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியினது குழுவின் வழிகாட்டல்களின் கீழ் வளிப்பதனாக்கும் தொகுதிகள் (A/C) மற்றும் காற்றோட்டத் தொகுதிகள் சுத்தப்படுத்தப்பட்டுத் தொற்று நீக்கம் செய்யப்பட வேண்டும். அத்துடன் சுகாதார வைத்திய அதிகாரியினால் சுகாதார மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்படும் வரை அவற்றினை மீள இயக்கக்கூடாது.
23. வகுப்பின் உரிமையாளர் / ஒழுங்கமைப்பாளர் தினசரி வகுப்பின் தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு (IPC) நடவடிக்கைகளின் நிலைமையை கண்காணிக்க வேண்டும் மற்றும் COVID-19 பரவாமல் தடுக்க தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
24. COVID -19 தடுப்பு நடவடிக்கைகளை கடைப்பிடிப்பதில் ஏதேனும் குறைபாடுகள் காணப்பட்டால், சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் வரை கல்வி வகுப்புகளை மூடுவதற்கு சுகாதார வைத்திய அதிகாரிக்கு அதிகாரம் உள்ளது.

**மாணவர்களுக்கு**

1. நாட்டில் / உங்கள் பிரதேசத்தில் கோவிட் 19 நிலைமை பற்றியும் முக்கிய தடுப்பு நடவடிக்கைகள் பற்றியும் அறிந்துகொள்ளுங்கள்
2. பின்பற்றவேண்டிய நடைமுறைகள்
   - அவர்களுக்கு காய்ச்சல், இருமல், மூக்கு ஒழுகுதல், சுவாசிப்பதில் சிரமம் இருந்தால் கலந்து கொள்ளக்கூடாது
   - மற்ற மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கிடையில் எப்போதும் 1 மீற்றர் தூரத்தை பேணவும்
   - பின்வரும் சந்தர்ப்பங்களில் கைகளை சவர்க்காரமிட்டு கழுவவும் அல்லது மதுசாரம் சார்ந்த கைகளைச் சுத்தப்படுத்தும் திரவத்தை கைகளுக்கு தடவவும் 1) வகுப்பிற்கு வகுப்பிற்குள் நுழைவதற்கு முன்னரும் 2) இடைவேளையின் போதும் 3) சாப்பிட முன்னரும் 4) மலசலகூடங்களைப் பயன்படுத்திய பின்னரும் 5) வகுப்பை விட்டு வெளியேறுவதற்கு முன்னரும் 6) முகக்கவசங்களை மாற்றுவதற்கு முன்னும் பின்னும் நன்கு .கழுவிக் கொள்ள வேண்டும்.
   - முகவுறைகளைச் சரியான முறையில் அணியவும், சாப்பிடும் போது சரியான முறையில் அகற்றி கவனமாக வைத்திருக்கவும். பயன்படுத்திய மற்றும் புதிய முகவுறைகளை வைப்பதற்காக இரண்டு சுத்தமான பைகளை வைத்திருக்க முடியும்.
   - இருமும் போதும் / தும்மும் போதும் சுவாச நற்பழக்கங்களைப் பின்பற்றவும்.
   - முகம், வாய், கண்கள் மற்றும் மூக்கு ஆகியவற்றைக் கைகளால் தொட வேண்டாம்.
   - வகுப்பு தொடங்குவதற்கு முன்பாகவோ, இடைவேளைகளின் போதோ அல்லது வகுப்பு முடிவடைந்த பின்னரோ குழுக்களாகச் சேர வேண்டாம்.
   - புத்தகங்கள் / காகிதாதிகள் / கையேடுகள் ஆகியவற்றினைப் பகிரக்கூடாது. எல்லா குறிப்புகளையும் மின்னஞ்சல்கள், வட்சப் படங்கள், கூகிள் சேமிப்பகங்கள் போன்றவற்றின் மூலம் பகிர ஊக்குவிக்கவும்.
   - உணவ தேவையெனில், வீட்டில் தயாரித்த உணவுகளை கொண்டுவரவும் மற்றும் உணவுகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.
   - நோய் திடீர் பரவலை முற்தடுப்புச் செய்வதற்குத் தேவை ஏற்படும்போது உங்களைத் தொடர்பு கொள்வதற்கு வசதியாக உங்களது வதிவிட முகவரி மற்றும் பெற்றோரின்

தொடர்பு இலக்கம் ஆகியவற்றை உங்களது ஆசிரியர்/கல்விநிலைய இயக்குனர்கள் ஆகியோருக்கு வழங்கவும்.

- போக்குவரத்தைப் பயன்படுத்தும் போது 1 மீற்றர் தூரத்தை பேண அனைத்து நடவடிக்கைகளை எடுக்கவும்.

**அறிவுறுத்தும் முறைகள்**

- மத்திய சுகாதார அமைச்சகத்தினால் வழிகாட்டல்கள் இணையத்தளங்கள் ஊடாகப் பிரசுரிக்கப்படவேண்டும், அத்துடன் சகல சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அறியத்தரப்பட வேண்டும்.
- தனியார் கல்விநிலைய வாயில்களில் சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.
- பொதுசனத்தொடர்பு ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாகப் பொதுமக்களுக்கு இவ்வழிகாட்டல்கள் தெரிவிக்கப்பட வேண்டும்.

Dr. ASELA GUNAWARDENA
Director General of Health Services
Ministry of Health
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

வைத்தியர் அசேல குணவர்தன
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

இணைப்பு I

## உத்தரவாதப் படிவம்

.....................................................................................................சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ்
.............................................................................................................................................................................

எனும் முகவரியில் அமைந்துள்ளதும்.........................................................எனும் வியாபாரப் பதிவெண் கொண்டதும்.................................................................................................... எனும் பெயரால் அழைக்கப்படுவதுமான ...................................................................................... வணிக நிலையத்தினது உரிமையாளர் / பணிப்பாளர் / முகாமையாளர்கவுள்ள.......................................................................... ஆகிய நான் காலத்திற்குக் காலம் சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சினால் மேற்படி வணிகத்தில் / நிறுவனத்தில் கொரோனா வைரசு (கோவிட் 19) நோயினை முற்தடுத்துக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக வெளியிடப்படும் வழிகாட்டிகள், அறிவுறுத்தல்கள் மற்றும்
சுற்றறிக்கைளில் கூறப்படுபவைகளை ஏற்றுக்கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவேன் எனவும், தொற்றுநோய்களை முற்தடுத்துக் கட்டுப்படுத்துவது தொடர்பிலான சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக நடந்து கொள்வேன் எனவும் இத்தால் உறுதியளிக்கிறேன்.

கையொப்பம்: .......................................................

தேசிய அடையாள அட்டை இலக்கம்: .......................................................

திகதி: .......................................................

*குறிப்பு: வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய நடந்துகொள்வீர்கள் என்ற உறுதியை வழங்கும் உறுதியளிக்கும் படிவத்தினை நீங்கள் நிரப்ப வேண்டும். இந்த உறுதியளிக்கும் படிவத்தின் மூலப் பிரதியானது உங்களது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இதன் பிரதி ஒன்று பிரதேசத்திற்கு உரிய உள்ளூராட்சிமன்றிற்கு (மாநகர சபை / நகர சபை / பிரதேச சபை) அனுப்பப்பட வேண்டும் என்பதுடன் இதன் இன்னொரு பிரதி உங்கள் வசம் இருக்க வேண்டும்.*
*மேற்கூறப்பட்ட வழிகாட்டல்கள் இறுக்கமாகப் பின்பற்றப்படுவதனை உறுதிப்படுத்துவது நிறுவனத்தின் / வளாகத்தின் உரிமையாளர் / தொழில்தருனர் / முகாமையாளர் இனது பொறுப்பாகும்.*